BSNL ஊழியர் சங்கம்

தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:17 **தேதி:-25.08.2017**

நேரடி நியமன ஊழியர்களின் ஓய்வூதிய பலன்கள் மற்றும் இதர செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

நேரடி நியமனம் செய்யப்பட்ட ஊழியர்களின் ஓய்வூதிய பலன்கள் பிரச்சனை நீண்ட நாட்களாக இழுத்துக் கொண்டே உள்ளது. அரசின் உத்தரவுகளின் படி நேரடி நியமன ஊழியர்களுக்கு ஓய்வூதிய பலன்களாக அவர்கள் ஊதியத்தில் 30%ஐ நிர்வாகம் வழங்க வேண்டும். EPF, DCRG மற்றும் ஓய்வு கால மருத்துவ நலன்கள் என ஏற்கனவே நிர்வாகம் 18%ஐ வழங்கி வருகிறது. எனவே மீதமுள்ள 12%ஐ ஓய்வூதிய பங்கீடாக வழங்க வேண்டும். ஆனால் நிர்வாகம் இதனை அமல்படுத்தவில்லை. நிறுவனத்தின் பொருளாதார சிக்கலைக் கணக்கில் கொண்டு அதற்கு 3% ஒதுக்குவதாக முன்மொழிந்துள்ளனர். ஆனால் BSNL ஊழியர் சங்கமும் இதர சங்கங்களும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. 27.07.2017 அன்று நடைபெற்ற ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் இது ஒரு முக்கியமான கோரிக்கையாக இருந்தது. இந்த வேலை நிறுத்தத்திற்கு பின் நிர்வாகம் நேரடி நியமன ஊழியர்களின் ஓய்வூதிய பங்கீடாக 5சதவிகிதத்தை தருவதாக கூறி வருகின்றது. இந்த சூழ்நிலையில் இது தொடர்பான விவாதத்திற்கு நிர்வாகம் BSNL ஊழியர் சங்கத்தை அழைத்திருந்தது. 22.08.2017 அன்று BSNL ஊழியர் சங்கத்தின் பொதுசெயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் துணை பொது செயலாளர் தோழர் சுவபன் சக்கரவர்த்தி ஆகியோருக்கும், நிர்வாகத்தின் தரப்பில் DGM(Estt) திரு சிவசங்கர் பிரசாத் அவர்களுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடைபெற்றது. DGM(Estt) நிர்வாகத்தின் முன்மொழிவை கூறினார். அரசாங்க உத்தரவான நேரடி நியமன ஊழியர்களுக்கு 30% ஓய்வூதிய பலன்கள் வழங்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தெரிவித்தது. எனினும், நேரடி நியமன ஊழியர்களுக்கு ஓய்வூதிய திட்டம் இதனால் கால தாமதமாவதை கணக்கில் கொண்டு ஓய்வூதிய நிதிக்கு 5% என்கிற நிர்வாகத்தின் முன்மொழிவை அமலபடுத்தலாம் என நமது சங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. அதே சமயம் அரசாங்கத்தின் உத்தரவான 30% ஓய்வூதிய பலன்களை நேரடி நியமன ஊழியர்களுக்கு அமலாக்கிட BSNL ஊழியர் சங்கம் நிர்வாகத்திடம் தொடர்ந்து முயற்சிக்கும் என்பதை தெளிவாக அவரிடம் தெரிவித்துள்ளது.

தொழிலாளர் நல இலாகா நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச ஊதியம் காசுவல் தொழிலாளர்களுக்கும் பொருந்தும்:- தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச ஊதியத்தை மாற்றி அமைத்து அதற்கான உத்தவரை தொழிலாளர் நல இலாகா 19.01.2017 அன்று கெஜட்டிலும் வெளியிட்டுள்ளது. இது வரை BSNLல் பணி புரியும் காசுவல் ஊழியர்களுக்கு CDA ஊதிய விகிதத்தின் குறைந்தபட்ச அளவிலேயே ஊதியம் வழங்கி வரப்படுகிறது. இந்த சூழ்நிலையில் தற்போது கார்ப்பரேட் அலுவலகம் தொழிலாளர் நல இலாகா உத்தரவிட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் காசுவல் தொழிலாளர்களுக்கும் பொருந்தும் என தெரிவித்துள்ளது. ஏதாவதொரு மாநில அரசாங்கம் வெளியிட்டுள்ள குறைந்த பட்ச ஊதியம் என்பது CDA ஊதிய விகிதத்தின் குறைந்த பட்ச அளவை விட அதிகமாக இருந்தது என்றால் அந்த மாநில அரசாங்கம் வெளியிட்டுள்ள குறைந்தபட்ச ஊதியத்தை காசுவல் தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டும் என்பதே அதன் பொருள்.

கார்ப்பரேட் அலுவலகம் வெளியிட்டுள்ள TELE DENSITY மற்றும் சந்தை பங்கீடு அறிக்கை:- 21.08.2017 அன்று கார்ப்பரேட் அலுவலகம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கீழ்கண்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன:-

- ஜூன் 2017ல் நாட்டில் தொலைபேசி இணைப்புகள் 6.04 மில்லியன்களும், கம்பியில்லா தொலைபேசி இணைப்புகள் 6.19 மில்லியன்களும் அதிகரித்து நாட்டின் ஒட்டு மொத்த தொலைபேசி இணைப்புகளின் எண்ணிக்கை 1.21 பில்லியன்களாக உள்ளன.
- ஜூன் மாதத்தில் ரிலையன்ஸ் ஜியோ 60.25 லட்சம் இணைப்புகளையும், பாரதி ஏர்டெல் 20.53 லட்சம் இணைப்புகளையும், BSNL நிறுவனம் 10.19 லட்சம் இணைப்புகளையும் கொடுத்துள்ளன.

மொத்த தொலைபேசிகளில்:-

- 30.06.2017 அன்றுள்ள 1211.29 மில்லியன் தொலைபேசி இணைப்புகளில் BSNL கொடுத்துள்ள இணைப்புகளின் எண்ணிக்கை 117.74 மில்லியன்கள்.
- சந்தை பங்கீட்டில் 5ஆம் இடம் உள்ள BSNLன் பங்கு 9.72%. ஜூன் மாதத்தில் 9.68%லிருந்து 9.72%ஆகவும் 2017-18ல் 9.63%லிருந்து 9.72%ஆகவும் உயர்ந்துள்ளது.
- ஜூன் மாதத்தில் 10.19 லட்சம் இணைப்புகளை கொடுத்துள்ள BSNL நிறுவனம் 2017-18ல் 26.59லட்சம் இணைப்புகளை அதிகரித்துள்ளது.

கம்பியில்லா தொலைபேசிகளில்:-

- 30.06.2017ல் உள்ள ஒட்டு மொத்த கம்பியில்லா தொலைப்பேசிகளின் எண்ணிக்கையான 1187.30 மில்லியன்களில் BSNLவசம் 104.53 தொலைபேசிகள் உள்ளன.
- தொலைபேசி சந்தையில் 5ஆம் இடம் பிடித்துள்ள BSNLன் சந்தை பங்கீடு 8.80%. WLLல் BSNLன் பங்கு 1.80%மும் GSMல் 10.21%மும்மாக உள்ளது.
- ஜூன் மாதத்தில் 11.78 லட்சம் இணைப்புகளை கொடுத்துள்ள BSNL நிறுவனம் 2017-18ல் மொத்தமாக 31.37 லட்சம் இணைப்புகளை அதிகரித்துள்ளது.
- 30.06.2017 வரையிலான 2017-18ஆம் ஆண்டுகளில் ஒட்டு மொத்த கம்பியில்லா தொலைபேசிகள் 1.42% உயர்ந்துள்ள போது BSNL நிறுவனம் 3.09%ஐ உயர்த்தியுள்ளது.
- 30.06.2017 அன்று மொத்தமாக நாட்டில் உபயோகப் படுத்தப்பட்டு வரும் தொலைபேசிகளின் எண்ணிக்கை 1022.76 மில்லியன்கள். அது ஒட்டுமொத்த தொலைபேசிகளில் 86.17%.
- சதவிகித அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வரும் 63.33% வாடிக்கையாளர்களைக் கொண்டு BSNL நிறுவனம் 9வது இடத்தில் உள்ளது.
- ஐடியா 101.37%, ஏர்டெல் 96.57% வோடோபோன் 93.45%, டாடா 83.85%, ரிலையன்ஸ் 77.35% பயன்படுத்தப்பட்டு வரும் வாடிக்கையாளர்களை கொண்டவர்களாக உள்ளனர்.

கம்பியுடன் கூடிய ப்ராட்பேண்ட் இணைப்புகளில்:-

- மொத்தமுள்ள 18.33 மில்லியன் இணைப்புகளில் BSNL நிறுவனத்திடம் 9.73 மில்லியன் இணைப்புகள் உள்ளன.
- ஜூன் மாதத்தில் 0.07 மில்லியன் இணைப்புகளை BSNL நிறுவனம் இழந்துள்ளது.
- சந்தை பங்கீட்டில் 53.08%உடன் BSNL முதலிடத்தில் உள்ளது ஜூன் மாதத்தில் 53.76%லிருந்து 53.08% ஆக இதன் சந்தை பங்கீடு குறைந்துள்ளது.

தொகுப்பாக:-

- நாட்டு மக்கள் தொகையில் 93.62%ஆக உள்ள TELE DENSITY டெல்லி பகுதி 255.32%ஆக முதலிடத்திலும், பீகார் கடைசியிடத்தில் 60.88%ஆகவும் உள்ளன. கம்பியுடன் கூடிய ப்ராட்பேண்ட் இணைப்புகளின் TELEDENSITY 1.40% உள்ள போது BSNL நிறுவனம் 0.74% கொடுத்துள்ளது.
- மொத்தமுள்ள தொலைபேசிகளில் சென்னை மற்றும் கேரள பகுதிகள் முதலிடத்திலும், ஒரிசா மற்றும் இமாசல பிரதேச பகுதிகள் 2ஆம் இடத்திலும் உள்ளன.
- கம்பியில்லா தொலைபேசிகளில் சென்னை பகுதி முதலிடத்திலிம், கேரளா, ஒரிசா மற்றும் இமாசல பிரதேசம் ஆகியவை இரண்டாம் இடத்திலும் உள்ளன.

நிறுவனத்தின் உற்பத்தி திறன் குறைந்துள்ளது தொடர்பாக CMDக்கு கடிதம்:- தொழிற்சங்கங்க உரிமைகள் மீதான நிர்வாகத்தின் தாக்குதலை தொடர்ந்து BSNLல் உள்ள சங்கங்கள் நிர்வாகத்திற்கு கொடுத்து வந்த ஒத்துழைப்பை 01.07.2017 முதல் விலக்கிக் கொண்டுள்ளன. ஊழியர்களும், அதிகாரிகளும் தங்களுக்கு விதிக்கப்பட்ட பணிகளை மட்டுமே செய்வார்களே தவிர அதிகப்படியான பணிகளை செய்ய மாட்டார்கள் என நிர்வாகத்திற்கு கடிதம் மூலமாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த கடிதம் கொடுக்கப்பட்டு ஒன்னரை மாதங்கள் ஆனபின்பும் நிர்வாகம் இது தொடர்பாக தொழிற்சங்கங்களை அழைத்து விவாதிக்கவில்லை. இதன் காரணமாக நிறுவனத்தின் உற்பத்தி திறன் கணிசமாக குறைந்துள்ளது. ரிலையன்ஸ் ஜியோவின் வருகைக்கு பின்பும் ஒவ்வொரு மாதமும் BSNL நிறுவனம் 20 லட்சத்திற்கு மேற்பட்ட இணைப்புகளை கொடுத்து வந்துக் கொண்டிருந்தது. உதாரணமாக ஜூன் மாதத்தில் 26,96,993 இணைப்புகள் கொடுக்கப்பட்டது. ஆனால் ஜூலை மாதத்தில் அது 17,75,953ஆக குறைந்துள்ளது. BSNLன் செயல்பாட்டுத் திறன் குறைந்ததையே இது காட்டுகிறது. எனவே நிர்வாகம் பேச்சு வார்த்தையின் மூலம் இதற்கு தீர்வு காண வேண்டும் என தொழிற்சங்கங்கள் சார்பாக கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்திய நிலக்கரி நிறுவனத்தின் ஊதிய மாற்ற பேச்சு வார்த்தை BSNLக்கு ஒரு பாடம்:- COAL INDIA LTD என்கிற பொதுத்துறை நிறுவனத்தில் ஊதிய மாற்ற பேச்சு வார்த்தை துவங்கியுள்ளது. BMS உள்ளிட்ட அனைத்து மத்திய தொழிர்சங்க்ங்கள் இணைந்து நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்துகின்றன. சங்கங்களின் சார்பாக 25% ஊதிய நிர்ணய பலன் கோரிக்கையாக வைக்கப்பட்டுள்ளது. முதலில் 10% மட்டுமே தருவதாக முன்வந்த நிர்வாகம் அனைத்து சங்கங்களும் ஒன்றாக வந்துள்ளதை கண்டு 18% தர முன்வந்துள்ளது. எனினும் அதனை ஏற்காத சங்கங்கள் அதிகப்படியான நிர்ணய பலனை கேட்டு வலியுறுத்தி வருகின்றன. 25% நிர்ணய பலனை 5 ஆண்டு காலத்திற்கு என சங்கங்கள் கோரியுள்ளது குறிப்பிடத்தக்கது. நமக்கு கிடைத்துள்ள தகவலின் படி 5 ஆண்டு காலத்திற்கு 20% மேல் அவர்கள் பெறுவார்கள் என தெரிய வருகிறது. 3வது ஊதிய மாற்றக் குழுவின் பரிந்துரைகள் பத்தாண்டு காலத்திற்கு அதிகபட்ச நிர்ணய பலன் என்பது 15% என உள்ளது என்பது மேலும் குறிப்பிடத்தக்கது. 3வது ஊதிய மாற்றக் குழுவின் பரிந்துரைகள் நிலக்கரி நிறுவனத்திற்கும் பொருந்தும். எனினும் தொழிற்சங்கங்களின் ஒற்றுமை காரணமாக 3வது ஊதிய மாற்றக்

குழுவின் பரிந்துரைகளையும் மீறி பெற உள்ளனர். இந்த ஒற்றுமையின் மூலம் நாமும் பாடம் படிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

பொதுத்துறை நிறுவனங்கள் சுரண்டப்படுவதை நிறுத்துக:- தங்களது அமைச்சரகங்களுக்கு கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனங்களிடம் இருந்து அனாவசிய சலுகைகளை பெறக் கூடாது என்றும் 5 நட்சத்திர விடுதிகளில் தங்கக் கூடாது என்றும் அமைச்சர்களுக்கு பிரதமர் அறிவுறுத்தி உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இது போன்ற நிகழ்வுகள் நடப்பதாக பிரதமருக்கு வந்த அறிக்கைகளின் அடிபடையில் அவர் இவ்வாறு அறிவுறுத்தி உள்ளார். பிரதமரின் இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்கதே. அதே சமயம், சமீபத்தில் NDA அரசாங்கட்தின் மூன்றாண்டு கால சாதனைகளை விளம்பரம் படுத்த BSNL உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களை செலவிட மோடி அரசாங்கம் உத்தரவிட்டது. பொதுத்துறை நிறுவனங்களை சுரண்டுவதை அரசாங்கமும் அமைச்சர்களும் ஒட்டு மொத்தமாக நிறுத்த வேண்டும்.

SNEA பொது செயலாளர் தோழர் K.செபாஸ்டியனுக்கு குற்றப்பத்திரிக்கை:- ஊழியர் பிரச்சனைகளின் தீர்விற்காக போராட்டங்களை விடுத்ததற்காக SNEA பொது செயலாளர் தோழர் K.செபஸ்டியனுக்கு BSNL நிர்வாகம் அதிகப்படியான தண்டனை விதிப்பதற்கான குற்றப்பத்திரிக்கையை கொடுத்துள்ளது. தோழர் K.செபாஸ்டியனை பழிவாங்க முயற்சிக்கும் நிர்வாகத்தின் நடவடிக்கையை BSNL ஊழியர் சங்கம் வன்மையாக கண்டிக்கின்றது. இதற்கு முன்னர் இதே போன்ற குற்றப்பத்திரிக்கையை தோழர் ரவி ஷில் வர்மா GS AIGETOAவிற்கும் விளக்கம் கோரும் கடிதத்தை தோழர் பிரகலாத் ராய் GS AIBSNLEAக்கும் வழங்கியது. நிர்வாகம் வழங்கியுள்ள அனைத்து குற்றப்பத்திரிக்கைகளையும், விளக்கம் கோரும் கடிதத்தையும் உடனடியாக திரும்ப பெற வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கோரியுள்ளது.

தேசிய கவுன்சில் உறுப்பினராக தோழர் சுரேஷ் குமார் GS BSNLMS:- BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயலகக் கூட்டத்தில் சுனில் கௌதம் JTOவிற்கு பதிலாக BSNLMS பொது செயலாளர் தோழர் சுரேஷ் குமார் அவர்களை தேசிய கவுன்சில் உறுப்பினராக நியமிப்பது என முடிவெடுக்கப்பட்டதின் அடிப்படையில் 24.08.2017 அதற்கான கடிதத்தை BSNL ஊழியர் சங்கம் நிர்வாகத்திற்கு கொடுத்துள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநிலச் செயலாளர்